Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.13/2022

| | |
|---|---|
| | Prosecution PW-2 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | ஆறுமுகம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**1 மற்றும் 2 ம் எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **04.08.2023**

**முதல் விசாரணை**

நான் காந்திகிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஜுவல்லரி கடை சொந்தமாக வைத்துள்ளேன். அ.சா.1 எனது மகன் ஆவான். கடந்த 07.07.2021 ஆம் தேதி எனது மகனின் splender வாகனத்தை கடைக்கு முன்பாக நிறுத்தியிருந்தார். இரவு 07.30 மணியளவில் வாகனத்தை பார்த்தபோது காணவில்லை. இருசக்கர வாகனத்தை நானும் எனது மகனும் தேடிப்பார்த்ததில் கிடைக்கவில்லை. அதன் பிறகு இது சம்மந்தமாக எனது

s/d. K.Ambiga

**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்.**

மகன் கரூர் நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். பின்னர் சுமார் 1 வருடம் கழித்து இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாக போலீசார் கூறினார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

நான் நாற்பது வருடமாக நகைக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். மேற்படி கடையை நானும் என் மகனும் சேர்ந்துதான் பார்த்துக்கொள்கிறோம். இந்த நகைக்கடை தவிர வேறு தொழில்கள் எனக்கும் என் மகனுக்கும் இல்லை. நானும் என் மகனும் கூட்டுக்குடும்பமாக காந்திகிராமத்தில் ஒன்றாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். வண்டி காணாமல் போனது என் மகன் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது கடையில் கண்காணிப்பு கேமரா உள்ளது. அந்த கண்காணிப்பு கேமராவின் பதிவுகளை பார்த்து சம்பவத்தன்று இரவு 08.30 மணியளவில் போலீசார் ஆய்வு செய்தனர் என்றால் சரிதான். சம்பவத்தன்றே எனது மகன் இருசக்கர வாகனம் தொலைந்து போனதற்காக புகார் கொடுத்தார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பிறகு எனது மகன் என்னுடன்தான் கரூரில் இருந்தார். வெளியூர் எதுவும் செல்லவில்லை. இந்த வழக்கில் சாட்சியாக உள்ள ராமானுாரைச் சேர்ந்த அ.சா.2 பாபு எனக்கு பங்காளி மகன் முறை என்றால் சரிதான். அ.சா.3, மூலக்காட்டானுாரைச் சேர்ந்த பாஸ்கர் எனக்கு பங்காளி முறை பேரன் உறவு ஆவார். ஆஜர் எதிரிகளை இதற்கு முன்பாக நான் பார்த்ததில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் புகார்தாரர் எனது மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d. K.Ambiga

**நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.**